**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.22/2010**

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 நெடுவேல் வயது 47, த/பெ கோட்டீஸ்வரன்**

**குறுக்கு விசாரணை (8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பு)**

நான் இவ்வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து பூர்வீக சொத்து என்பதால் மேற்படி சொத்தை எங்களுக்கு தரக்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தியாகராஜன், கோட்டீஸ்வரன் யார் என்றால் தியாகராஜன் என் பெரியப்பா, கோட்டீஸ்வரன் என் தந்தை ஆவார். பார்த்தீபன் யார் என்றால் என் சித்தப்பா ஆவார். 1963 வருட கிரைய பத்திரம் தாக்கல் செய்த கிரைய பத்திரம் எதற்காக வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் மேற்படி சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும், ஆனால் பத்திரத்தில் அது 2ம் பிரதிவாதியான வங்கிக்கு எழுதி கொடுத்ததாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி 1963 வருட கிரைய பத்திரத்தை ரத்து செய்ய கோரி நாங்கள் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பல்பொருள் அங்காடி வைத்து நடத்தி வருகிறார்களா என்றால் சரியல்ல, நாங்கள் பயிர் செய்து வருகிறோம். என் தந்தையான 1ம் வாதி மேற்படி தாவா சொத்தை அனுபவித்து வருவதற்காக அடங்கலை தாக்கல் செய்துள்ளார், அவர் இறந்த பிறகு நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம் என்பதற்கு ஆவணமாக அடங்கலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. இன்றைய தேதியில் பட்டா என் பெயரில் உள்ளது என்பதற்கு ஆதரவாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எங்கள் தாத்தா பெயரில்தான் உள்ளது. என் தாத்தா முனுசாமி இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, என் தந்தை செய்திருப்பாரா என்று தெரியவில்லை. நான் தாக்கல் செய்த முதல் விசாரணையில் வா.சா.ஆ.1 முதல் 22 வரையிலான ஆவணங்களில் மேற்படி 2 ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான்.

4. இவ்வழக்கில் முனுசாமி கவுண்டர் வாரிசுகளான தியாகராஜன், பார்த்தீபன் ஆகியோரை அவசிய தரப்பினராக இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்களை நான் வாதியாக அல்லது பிரதிவாதியாக சேர்த்துள்ளேனா என்றால் வாதியாக எங்களுக்கு ஆதரவாக தரப்பினராக சேர்த்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே என் தாத்தா முனுசாமி கவுண்டர் 1963ம் ஆண்டே அரசுக்கு 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் தாத்தா முனுசாமி கவுண்டர் கிரையம் கொடுக்கும் போது என் தந்தை, சித்தப்பா, பெரியப்பா ஆகியோர் மைனர்களாக இருந்தார்கள் அவர்களையும் சேர்த்துதான் கிரையம் கொடுத்தார் என்றால் பத்திரத்தை நான் பார்க்கும் போது என் தந்தை, சித்தப்பா, பெரியப்பா ஆகியோர் மைனர்களாக இருந்தார்கள், ஆனால் தர்மராஜன், லட்சுமணன் ஆகியோர் மேஜராக இருந்தார்கள்.

5. தர்மராஜன், லட்சுமணன் ஆகியோர் முனுசாமி கவுண்டருக்கு எதிராக கிரைய பத்திரம் 1963ல் கிரையம் கொடுத்ததற்கு ஏதேனும் வழக்கை தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. என் தந்தை தாக்கல் செய்துள்ளார். 1963ல் கிரையம் எழுதி கொடுத்த போது என் தந்தைக்கு என்ன வயது என்றால் தெரியாது. 1963ல் காலத்திலிருந்து 1966 3 ஆண்டுகள் காலம் வரை எந்த வழக்கும் தொடுக்கவில்லை என்றால் தெரியாது.

6. என் தந்தை மேஜராகி 18 வயதிலிருந்து 21 வயது வரை இவ்வழக்கை தொடுக்கவில்லை என்றால் இல்லை. இவ்வழக்கில் எந்த இடத்திலும் 1963 ஆண்டில் என் தந்தைக்கு என்ன வயது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் தந்தையின் பிறப்பு சான்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா எழுதி கொடுத்த கிரைய பத்திரத்திற்கு விரோதமாக நான் இவ்வழக்கை 2ம் பிரதிவாதி மேற்படி தாவா சொத்தை அனுபவிக்க தடை கோரியுள்ள பரிகாரம் என்றால் சரியல்ல, என் தாத்தா எந்த சொத்தையும் எழுதி கொடுக்கவில்லை.

7. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கிரைய பத்திர நகல் எங்கிருந்து எடுத்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் அசல் என் தந்தை வசம்தான் உள்ளது. மேற்படி அசல் பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1949ம் ஆண்டு வாங்கிய பத்திரத்தை தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பத்திரமானது முனுசாமி கவுண்டர் கிரையம் பெற்ற பத்திரம்

என்றால் சரிதான். மேற்படி 1949ம் ஆண்டு பத்திரத்தில் உள்ள கையெழுத்தையும், 1963ம் ஆண்டு பத்திரத்தில் உள்ள முனுசாமி கவுண்டரின் கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்க்க நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. முனுசாமி கவுண்டர் சுயமாக வாங்கிய சொத்தை அவர் விற்க அவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி என்பவர் என் தாத்தா முனுசாமி கவுண்டரிடமிருந்து முழு தொகையும் கொடுத்து நல்ல எண்ணத்தில்தான் (Bonofide purchaser) கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. ஆகவே 2ம் பிரதிவாதிக்கு எதிராக தடையுத்தரவு பரிகாரம் கோர முடியாது என்பதால் இவ்வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதியை தவிர்த்து மற்ற 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது, மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.